இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 277 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 04 – ஞாயிற்றுக்கிழமை 18 மே 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 277 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 04 - Sunday 18 May 2025 - Dak 12 Pages ₹ 5.00

## ஆளுநர்களுக்குக் காலக்கெடு குறித்து குடியரசுத் தலைவரை பயன்படுத்தி

# உச்சநீதிமன்றத் தீர்ப்பை கேள்விக்குள்ளாக்குவதா?

## ஒன்றிய அரசுக்கு ‘தி இந்து’ ஆங்கில நாளேடு கண்டனம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அண்மையில் 100வது பிறந்தநாளைக் கொண்டாடிய கழக மூத்த முன்னோடியும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான சோ.மா.ராமச்சந்திரன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (17.5.2025) நேரில் சென்று, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், கழக நிர்வாகிகள் எம்.கார்த்திக் மோகன், ச.பரமசிவம், கோ.நடராஜன் மற்றும் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

சென்னை, மே 18 -

**மசோதாக்கள் குறித்து முடிவு எடுக்க ஆளுநர்களுக்கு காலக்கெடு நிர்ணயம் செய்யும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு குறித்து குடியரசுத் தலைவர் கேள்வி எழுப்பி உள்ளது. அரசியல் சட்ட ரீதியாக முடிவு காணப்பட்ட விவகாரத்தை மீண்டும் கிளப்பும் ஒன்றிய அரசின் முயற்சி என ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள தலையங்கத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளது.**


இது குறித்து ‘தி இந்து’ நாளிதழ் தலையங்கத்தில்,

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநர்களின் தன்னிச்சையான மற்றும் ஜனநாயக விரோத அதிகாரங்கள் குறித்த நீண்ட கால சர்ச்சையை முடிவுக்கு கொண்டு வரும் வாய்ப்பை ஒன்றிய அரசு தவற விட்டுவிட்டதாகவும், மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் ஆளுநர் மற்றும் குடியரசுத்தலை வரின் அதிகாரங்கள் குறித்த அரசியலமைப்பின் நிலைப்பாட்டை கடந்த ஏப்ரல் 8ம் தேதி அளித்த தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தி உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் காலக்கெடுவை குறிப்பிடவில்லை என்றாலும், ஒரு மசோதா ஒப்புதலுக்காக ஆளுநருக்கும் குடியரசுத் தலைவருக்கும் அனுப்பப்பட்டவுடன், அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட நியாயமான தீர்ப்பு இது. இந்தத் தீர்ப்பு நீண்டகால கேள்விகளுக்கு தெளிவான விடைகளை அளித்துள்ளதாக இத்தலையங்கம் தெரிவித்துள்ளது.

**ஆளுநர்களின் அத்து மீறல்!**

தற்போது, ஒன்றிய அரசு, அரசியல் சட்டப் பிரிவு 143ன் கீழ் உச்சநீதிமன்றத்திற்கு குடியரசுத் தலைவர் கேட்டுள்ள கேள்விகள் மூலம், இவ்விவகாரத்தை மீண்டும் கிளப்பி உள்ளதாகவும் ‘தி இந்து’ தலையங்கம் விமர்சித்துள்ளது. அண்மைக்காலமாக ஒருசில ஆளுநர்களின் அதிகார அத்துமீறல்கள் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையேயான உறவுகளை மோசமாக்கி உள்ளதாகவும், மாநில அரசுகளின் ஆட்சி அதிகாரத்தை பறிப்பதாக உள்ளதாக



THE HINDU

Closing argument

The Presidential Reference seeks to undermine a settled question

The Union government has missed an opportunity to put a lid on the prolonged controversy over the arbitrary and the undemocratic use of power by unelected Governors. A Supreme Court judgment on April 8, 2025 clarified the constitutional position over the powers of the Governor and the President in giving assent to Bills passed by State Assemblies. A Division Bench of Justices J.B. Pardiwala and R. Mahadevan held that Tamil Nadu Governor R.N. Ravi's act of withholding 10 State Bills was "illegal" and "erroneous". The well-reasoned judgment had outlined the possible courses of action for the Governor and the President once a Bill is before them for their assent, though the Constitution does not specify timelines. The judgment established long awaited and much required clarity on several questions. Now, the Centre, through a Presidential Reference, has brought up all these questions again to the Court, seeking its 'opinion'

வும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு மசோதா, சட்டமாக்கப்படு வதை கால வரையின்றி நிறுத்தி வைக்க ஆளுநர்களுக்கோ, குடியரசுத் தலைவருக்கோ தன்னிச்சையான அதிகாரங்கள் இல்லை என்ற உறுதியான முடிவுக்கு வருவதற்கு, முந்தைய பல தீர்ப்புகள், இந்திய கூட்டாட்சியின் முறையை ஆய்வு செய்த குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அரசியல் நிர்ணய சபை விவாதங்களை உச்சநீதிமன்றம் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளதாகவும் இத்தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**சட்டமன்றங்களை முடக்கும் அதிகாரம் இல்லை!**

ஆளுநர்கள் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட விசித்திர அதிகாரம் படைத்தவர்களாக உள்ளனர், ஆனால், அரசியலமைப்பு அவர்களுக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கவில்லை என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தை முடக்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லவே இல்லை என்றும் ‘தி இந்து’ தலையங்கம் தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் பயன்படுத்தி இந்த சர்ச்சைகளுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம் என்றும், தேவைப்பட்டால், இந்த தீர்ப்புக்கு ஏற்ப அரசியல் சட்டத் திருத்தங்களைக் ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கலாம் என்றும் கருத்து தெரிவித்துள்ள இத்தலையங்கம், இதற்கு பதிலாக, ஏற்கனவே தீர்வு காணப்பட்ட விவகாரத்தை குடியரசுத்தலைவரின் கேள்விகள் மூலம் ஒன்றிய அரசு மீண்டும் எழுப்பி உள்ளதாகவும், அரசியல் சட்ட நிபுணர்கள் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளபடி, நீதிமன்றம் வழங்கும் கருத்து நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றாது என்றும் தெளிவுபடுத்தி உள்ளது.

குடியரசுத் தலைவரின் கேள்விகள் என்ற அசாதாரண பாதையை தேர்ந்தெடுப்பதன் மூலம், அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் வழங்காத அதிகாரங்களை ஆளுநர்கள் மூலம் பயன்படுத்துவதற்கான நோக்கத்தை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆளுநரின் அதிகாரம் குறித்து ஒருமித்த கருத்து ஏற்படுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கியதாகவும், தேவைப்பட்டால், முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டி, பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஒன்றிய அரசு தேட வேண்டும் என்றும் ‘தி இந்து’ தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### அரசியல் உள்நோக்கத்தோடு சோதனை மேற்கொண்டு

## அரசு ஊழியர்களை அமலாக்கத் துறை துன்புறுத்துவதா?

### அமைச்சர் சு.முத்துசாமி கண்டனம்!

சென்னை, மே 18 –

அரசியல் உள்நோக்கத்தோடு சோதனை மேற்கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர்களை துன்புறுத்தும் அமலாக்கத் துறைக்கு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு, தி.மு.க. ஆட்சியில் டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடுகள் நடைபெற்றதைப் போன்று சித்தரிப்பதற்காக, அரசியல் உள்நோக்கத்தோடு, கடந்த மாதம் டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத் துறை சோதனைகளை மேற்கொண்டது.

இந்த சோதனைகளின்போது, டாஸ்மாக் நிறுவனத்தின் செயல்பாடுகளில் முறைகேடுகள் நடைபெற்றதற்கான எந்தவிதமான ஆதாரமும்



கிடைக்காத நிலையில், ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாக ஒரு கற்பனைச் செய்தியை அமலாக்கத் துறை வெளியிட்டது. இவ்வாறு வெளியிட்ட தவறான அறிக்கையை நியாயப்படுத்துவ த ற்காக, அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவன அலுவலர்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது.

**உச்சநீதிமன்ற விதிகளை மீறுவதா?**

இதன் தொடர்ச்சியாக, நேற்று டாஸ்மாக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் சிலருடைய வீடுகளில் சோதனைகளை அமலாக்கத் துறை மேற்கொண்டுள்ளது. இந்த சோதனைகளின் போதும், எந்தவிதமான ஆதாரங்களும் கிடைக்காத நிலையில், அரசு அலுவலர்களை அமலாக்கத் துறை தொடர்ந்து துன்புறுத்தியும், கட்டாயப்படுத்தியும் வருகிறது.

பல அமலாக்கத் துறை வழக்குகளில், மாண்பமை உச்சநீதிமன்றம் விதித்துள்ள வழிமுறைகளைத் தொடர்ந்து மீறி, இவ்வாறு அமலாக்கத் துறை மேற்கொண்டுவரும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பாக எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசு அலுவலர்களுடன் அரசு எப்போதும் துணை நிற்கும்!**

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகத் தேவையான அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது அலுவலர்களுடன் தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### விரைவில் புதிய 20 ரூபாய் நோட்டுகள் அறிமுகம்!

#### ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

புதுடெல்லி, மே 18 –

விரைவில் புதிய 20 ரூபாய் நோட்டை அறிமுகம் செய்ய உள்ளதாக, இந்தியன் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இந்தியாவில் 500, 200, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுகள் தற்போது புழக்கத்தில் உள்ளன. பணமதிப்பிழப்பு நடவடிக்கையை தொடர்ந்து புதிய 500 மற்றும் 200 ரூபாய்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இருப்பினும், சில்லறை தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், புதிய 20 ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் வங்கி விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. புதிய வடிவத்தில் மகாத்மா காந்தி படம் அடங்கிய இந்த ரூபாய் நோட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மாலோத்திரா, கையொப்பத்துடன் கூடிய 20 ரூபாய் விரைவில் வெளியிட உள்ளது.

சில்லறை பற்றாக்குறை இருப்பதாக வணிகர்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்ட நிலையில், புதிய 20 ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் வங்கி அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

---

### பி.எஸ்.எல்.விசி 61 ராக்கெட்

## இன்று விண்ணில் பாய்கிறது!

ஸ்ரீஹரிகோட்டா, மே 18 -

இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே எல்லையில் பதற்றமான சூழல் நிலவும் நிலையில், செயற்கைக்கோளில் இருந்து நாட்டின் எல்லையை கண்காணிக்கும் வகையில் ரிசாட் 1பி (RISAT1B) என்ற புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை, பி.எஸ்.எல்.விசி 61 ராக்கெட் மூலம் இன்று விண்ணில் செலுத்த இஸ்ரோ ஆயத்தமாகி வருகிறது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து இன்று அதிகாலை 5.59 மணிக்கு பி.எஸ்.எல்.வி சி 61 ராக்கெட் விண்ணில் ஏவப்பட உள்ளது.

இந்த ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து அனுப்பப்படும் 101வது ராக்கெட்டாகும் ரிசாட் 1பி (RISAT1B) செயற்கைக்கோள் என்று அழைக்கப்படும் EOS09 செயற்கைக்கோள், ஒரு அதிநவீன CBAND ரேடார் கொண்ட செயற்கைக் கோளாகும். இது பகல் அல்லது இரவு என எந்த வானிலையிலும் பூமியின் மேற்பரப்பின் உயர் தெளிவுத்திறன் படங்களைப் பிடிக்க உதவுகிறது.

இந்த மேம்பட்ட ரேடார் தொழில்நுட்பம், மேகங்கள், மழை மற்றும் இருள்வழியாக செயற்கைக் கோளைப் பூமியை நோக்கி துல்லியமாக பார்க்க அனுமதிக்கிறது.

ஆப்டிகல் இமேஜிங் செயற்கைக் கோள்களை விட, இது சிறப்பாக செயல்படும் எனக் கூறப்படுகிறது. தோராயமாக 1,710 கிலோ கிராம் எடையுள்ள EOS 09 செயற்கைக்கோள் சூரிய ஒத்திசைவான சுற்றுப் பாதையில் வைக்கப்படும், வெளிச்சம் அதன் இமேஜிங் பணிகளை உறுதி செய்கிறது.

இந்த பல் துறைத் திறன் EOS09 செயற்கைக் கோளை எல்லை கண்காணிப்பு, தேசிய பாதுகாப்பு, விவசாயம், வானவியல், வெள்ள கண்காணிப்பு மற்றும் நகர்ப்புற திட்டமிடல் உள்ளிட்ட பணிகளுக்கு பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.